இனிமையான குழந்தைகளே! தனது இலட்சியம் மற்றும் இலட்சியத்தை (குறிக்கோளை ) வழங்கும் வள்ளலாகிய தந்தையை நினைவு செய்தால் தெய்வீக குணங்கள் வந்து விடும், பிறருக்கு துக்கம் கொடுப்பது, நிந்தனை செய்வது இவையனைத்தும் அசுர இலட்சணங்கள் ஆகும்.

கேள்வி: தந்தைக்கு குழந்தைகளாகிய உங்கள் மீது மிக உயர்வான அன்பு உள்ளது, அதன் அடையாளம் என்ன?

பதில்: தந்தையிடம் இருந்து கிடைக்கும் இனிமையிலும் இனிமையான அறிவுரைகள் - இந்த அறிவுரை களைக் கொடுப்பதே அவரின் உயர்வான அன்பின் அடையாளம் ஆகும். தந்தையின் முதல் அறிவுரை - இனிமையான குழந்தைகளே, ஸ்ரீமத்-க்கு புறம்பான எந்த தலைகீழ் காரியமும் செய்யக் கூடாது. 2. நீங்கள் மாணவர்கள், நீங்கள் தனது கையில் சட்டத்தை எடுக்கக் கூடாது. நீங்கள் தனது வாயிலிருந்து எப்போதும் ரத்தினங்களை வெளிப்படுத்துங்கள், கற்களை அல்ல.

ஓம் சாந்தி. தந்தை வந்து குழந்தைகளுக்குப் புரிய வைக்கிறார். இப்போது இவர்களை (லட்சுமி-நாராயணர்) நன்றாகப் பார்க்கிறீர்கள். இதுவே இலட்சியம் மற்றும் குறிக்கோள். அதாவது நீங்கள் இந்த குலத்தினராக இருந்தீர்கள். எவ்வளவு இரவு-பகலுக்கான வித்தியாசம் உள்ளது, ஆகையால் அடிக்கடி இவர்களைப் பார்க்க வேண்டும். நாம் இப்படி ஆக வேண்டும். இவர்களின் மகிமையை நல்ல விதமாக அறிவீர்கள். இந்த லட்சுமி நாராயணர் படத்தை சட்டைப்பையில் வைப்பதனாலேயே குஷி இருக்கும். உள்ளுக்குள் இரண்டும் கெட்டான் நிலை (குழப்பம்) இருக்கக் கூடாது. இது தேக அபிமானம் என்று சொல்லப்படுகிறது. ஆத்ம அபிமானி ஆகி இந்த லட்சுமி நாராயணரைப் பார்த்தீர் கள் என்றால் நாமும் இவ்வாறு ஆகிக் கொண்டிருக்கிறோம் என்று புரிந்து கொள்வீர்கள். ஆக கண்டிப் பாக இவர்களைப் பார்க்க வேண்டும். நீங்கள் இப்படி ஆக வேண்டும் என்று தந்தை புரிய வைக்கிறார். மத்யாஜி பவ. இவர்களைப் பாருங்கள், நினைவு செய்யுங்கள். உதாரணம் சொல்கின்றனர் அல்லவா - ஒருவர் தன்னை எருமை என்று நினைத்தாராம், பிறகு தன்னை எருமை என்றே புரிந்து கொள்ளத் தொடங்கி விட்டாராம். இது நம்முடைய இலட்சியம், குறிக்கோள் என்று நீங்கள் அறிவீர்கள். இவர்கள் (லட்சுமி-நாராயணர்) போல் ஆக வேண்டும். எப்படி ஆவது? தந்தையின் நினைவின் மூலம் ஆக வேண்டும். ஒவ்வொருவரும் தன்னிடம் கேட்க வேண்டும் - நாம் இவர்களைப் பார்த்து தந்தையை நினைவு செய்து கொண்டிருக்கிறோமா? பாபா நம்மை தேவதையாக ஆக்குகிறார் என்பதை புரிந்திருக்கிறீர்கள். முடிந்த அளவு நினைவு செய்ய வேண்டும். நிரந்தரமாக நினைவு இருக்க முடியாது என்று பாபா சொல்லவே செய்கிறார். ஆனால் முயற்சி செய்ய வேண்டும். இல்லற விசயங்களின் காரியங்களைச் செய்தபடியே இவர்களை (லட்சுமி நாராயணரை) நினைவு செய்தால் தந்தை கண்டிப்பாக நினைவில் வருவார் தந்தையை நினைவு செய்தால் நாம் இப்படி ஆக வேண்டும் என்பது கண்டிப்பாக நினைவில் இருக்கும். இந்த நினைவிலேயே மூழ்கி இருக்க வேண்டும். அப்போது ஒருவர் மற்றவரை ஒரு போதும் நிந்தனை செய்ய மாட்டீர்கள். இவர் இப்படி, இன்னார் இப்படி..... .யார் இந்த விசயங்களில் ஈடுபட்டிருக்கின்றனரோ அவர்கள் உயர் பதவியை அடைய

முடியாது. அப்படியே இருந்து விடுவார்கள். எவ்வளவு எளிதான முறையில் புரிய வைக்கப் படுகிறது. இவர்களை நினைவு செய்து, தந்தையை நினைவு செய்தீர்கள் என்றால் இவர்களைப் போல ஆகியே தீருவீர்கள். நீங்கள் இங்கே முன்னால் அமர்ந்திருக்கிறீர்கள். அனைவரின் வீட்டிலும் இந்த லட்சுமி நாராயணரின் படம் கண்டிப்பாக இருக்க வேண்டும். எவ்வளவு துல்லியமாக உணர்த்தும் படம். இவர் களை நினைவு செய்தீர்கள் என்றால் தந்தையின் நினைவு வரும். முழு நாளிலும், மற்ற விசயங் களுக்குப் பதிலாக இதையே சொல்லிக் கொண்டிருங்கள். இன்னார் இப்படி, இதுவா... இப்படி பிறரை நிந்தனை செய்வது - இப்படிப்பட்டவர் இரண்டும் கெட்டான் நிலை யுடையவர் என்று சொல்லப் படுவார். நீங்கள் உங்களுடைய புத்தியை தெய்வீகமாக ஆக்க வேண்டும். பிறருக்கு துக்கம் கொடுப்பது, நிந்தனை செய்வது, சஞ்சலப் படுத்துவது - இந்த சுபாவம் இருக்கக் கூடாது. இதில் அரைக் கல்ப காலம் இருந்தீர்கள். இப்போது குழந்தைகளாகிய உங்களுக்கு எவ்வளவு இனிமையான அறிவுரை கிடைக்கிறது. இதை விட உயர்ந்த அன்பு வேறேதும் கிடையாது. ஸ்ரீமத்திற்கு புறம்பாக வேறு எந்த தலைகீழ் காரியமும் செய்யக் கூடாது. டிரான்ஸில் (ஆழ்தியானம்) செல்வது பற்றியும் தந்தை வழி கூறுகிறார் - போக் (பிரசாதம்) மட்டும் அர்ப்பணம் செய்து விட்டு வந்து விடுங்கள். வைகுண்டத்திற்குச் செல்லுங்கள், நடனம் ஆடுங்கள் என்று தந்தை சொல்வதில்லை. வேறு இடங்களுக்குச் சென்றால் மாயையின் பிரவேசம் ஆகிவிடும் என்று புரிந்து கொள்ளுங்கள். மாயை யின் முதல் காரியம் தூய்மையற்றவராக ஆக்குவது. சட்டத்திற்குப் புறம்பான நடத்தையால் மிகவும் நஷ்டம் ஏற்படுகிறது. தன்னைத் தான் பாதுகாத்துக் கொள்ளாவிட்டால் பிறகு கடுமையான தண்டனைகள் அடைய வேண்டியிருக்கும். தந்தையுடன் கூடவே தர்மராஜாவும் இருக்கிறார். அவரிடம் எல்லைக் கபாற்பட்ட கணக்கு வழக்கு உள்ளது. இராவணனின் சிறையில் எவ்வளவு வருடங்கள் தண்டனைகள் அனுபவித்தீர்கள். இந்த உலகத்தில் எவ்வளவு அளவில்லா துக்கம் உள்ளது. மற்ற எல்லா விசயங்களையும் மறந்து ஒரு தந்தையை நினைவு செய்யுங்கள், மற்ற சந்தேகங்களை மனதில் இருந்து வெளியேற்றுங்கள். விகாரத்தில் தள்ளி விடுவது யார்? மாயையின் பூதங்கள். உங்களுடைய இலட்சியம் குறிக்கோளே இதுதான். இராஜயோகம் அல்லவா. தந்தையை நினைவு செய்வதன் மூலம் இந்த ஆஸ்தி கிடைக்கும். ஆக இந்த தொழிலில் ஈடுபட வேண்டும். உள்ளுக்குள் இருக்கும் குப்பைகள் அனைத்தையும் நீக்க வேண்டும். மாயையின் தாக்கம் கூட மிகவும் கடுமையானதே. ஆனாலும் அதனை நீக்கிக் கொண்டே இருக்க வேண்டும். முடிந்தவரை நினைவின் யாத்திரையில் இருக்க வேண்டும். இப்போது நிரந்தர நினைவு இருக்க வாய்ப்பில்லை இறுதியில் நிரந்தர நினைவு செய்யும் நிலை வரும்போதுதான் உயர் பதவியை அடைவீர்கள். ஒருவேளை உள்ளுக்குள் இரண்டும் கெட்டான் நிலை, கெட்ட சிந்தனைகள் இருந்தால் உயர் பதவி கிடைக்காது. மாயையின் வசப்பட்டு தோல்வி அடைகின்றனர்.

குழந்தைகளே! அழுக்கான காரியம் செய்து தோல்வியை அடையாதீர்கள் என்று தந்தை புரிய வைக்கிறார். நிந்தனை முதலானவை செய்து உங்களின் கதி மிகவும் கெட்டதாக ஆகி விட்டது. இப்போது சத்கதி ஏற்படும் சமயத்தில் கெட்ட காரியம் செய்யாதீர்கள். பாபா பார்க்கிறார், மாயை கழுத்து வரை விழுங்கி விட்டது. தெரிவதே இல்லை. நாம் மிகவும் நன்றாக நடந்து கொண்டி ருக்கிறோம் என்று தாம் புரிந்து கொள்கின்றனர், ஆனால் அப்படி எதுவும் இல்லை. மனம்,

சொல், செயலால் வாயில் இருந்து ரத்தினங்கள்தான் வெளிப்பட வேண்டும். அழுக்கான பேச்சு பேசுவது கல் போன்றவர் ஆவர். இப்போது நீங்கள் கல்லிலிருந்து தங்கமாக ஆகிக் கொண்டி ருக்கிறீர்கள். வாயில் இருந்து ஒரு போதும் கற்கள் வெளிப்படக் கூடாது. பாபா புரிய வைக்க வேண்டியுள்ளது. குழந்தைகளுக்குப் புரிய வைப்பது தந்தையின் உரிமையாகும் சகோதரன்-சகோதரனுக்கு எச்சரிக்கை கொடுப்பார் என்பதல்ல. ஆசிரியரின் கடமை அறிவுரை கொடுப்பது. அவர் எது வேண்டுமானலும் சொல்லலாம். மாணவர்கள் சட்டத்தை கையில் எடுக்கக் கூடாது. நீங்கள் மாணவர்கள் அல்லவா. தந்தை புரிய வைக்க முடியும். மற்றபடி ஒரு தந்தையை நினைவு செய்யுங்கள் என்பது தந்தையின் வழியாகும். உங்களின் அதிர்ஷ்டம் இப்போது தொடங்கியுள்ளது. ஸ்ரீமத்படி நடக்காவிட்டால் உங்களின் அதிர்ஷ்டம் கெட்டுப் போகும் பிறகு பச்சாதாபப்பட வேண்டும். தந்தையின் ஸ்ரீமத்படி நடக்காவிட்டால் ஒன்று தண்டனைகள் அனுபவிக்க வேண்டியிருக்கும், மற்றொன்று பதவியும் குறைந்து விடும். பிறவி பிறவிகளுக்கு, கல்ப கல்பத்திற்கான பந்தயம் ஆகும். தந்தை வந்து கற்பிக் கிறார் எனும்போது பாபா நமது ஆசிரியர் என்பது புத்தியில் வர வேண்டும். தன்னை ஆத்மா என புரிந்து கொள்ளுங்கள் என்ற புதிய ஞானம் அவரிடமிருந்து கிடைக்கிறது. ஆத்மாக்கள் மற்றும் பரமாத்மாவின் சந்திப்பு என கூறப்படுகிறது அல்லவா. 5000 வருடங்கள் கழித்து சந்தித்துள்ளனர். இதில் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு ஆஸ்தி எடுக்க முடியும். இல்லாவிட்டால் மிக மிக பச்சாதாபப்படுவீர்கள், அழுவீர்கள். அனைத்தும் காட்சியாகத் தெரியும். பள்ளியில் குழந்தைகள் வகுப்பு மாறும் போது பின்னால் அமர்ந்திருப்பவர்களை அனைவரும் பார்ப்பார்கள். இங்கும் கூட மாற்றம் ஏற்படுகிறது. இங்கே சரீரம் விட்டு சென்று சத்யுகத்தில் இளவரசர்களின் கல்லூரியில் மொழியைக் கற்றுக் கொள்வார்கள். அங்கே அனைவரும் மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கும், அது தாய்மொழி. பலருக்கும் முழுமையான ஞானம் கிடையாது, பிறகு முறையாக படிப்பதும் இல்லை. ஒன்றிரண்டு முறை தவற விட்டு விடுகிறார்கள், பிறகு அதுவே பழக்கமாகி விடுகிறது. மாயையின் சீடர்களுடன் தொடர்பு உள்ளது. சிவபாபாவின் சீடர்கள் மிகச் சிலரே. மற்ற அனைவரும் மாயை யின் சீடர்கள். நீங்கள் சிவபாபாவின் சீடர்கள் ஆகினீர்கள் என்றால் மாயையால் சகித்துக் கொள்ள முடிவதில்லை. ஆகையால் மிகவும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். கீழான அழுக்கு நிறைந்த மனிதர்களிடம் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அன்னப்பறவைகள் மற்றும் கொக்கு கள் போல் இருக்கின்றனர் அல்லவா. பாபா இரவில் கூட அறிவுரை கொடுத்தார். முழு நாளில் யாராவது ஒருவரை நிந்தனை செய்வது, பரசிந்தனை செய்வது - இதனை தெய்வீக குணங்கள் என கூற முடியாது. தேவதைகள் இப்படிப்பட்ட காரியங்கள் செய்வதில்லை. தந்தை மற்றும் ஆஸ்தியை நினைவு செய்யுங்கள் என்று தந்தை சொல்கிறார், ஆனாலும் நிந்தனை செய்தபடி இருக்கின்றனர். நிந்தனை பிறவி பிறவிகளாக செய்தபடி வந்தீர்கள். இரண்டும் கெட்டான் நிலை உள்ளுக்குள் இருக்கிறது. இதுவும் மனதிற்குள்ளாகவே நடக்கும் சண்டையாக உள்ளது. தனது அழிவை இலவச மாகச் செய்து கொள்கின்றனர். பலருக்கும் நஷ்டத்தை ஏற்படுத்துகின்றனர். இன்னார் இப்படி.... - இதில் உங்களுடையது என்ன போகிறது? அனைவருக்கும் உதவி செய்பவர் ஒரு தந்தை ஆவார். ஸ்ரீமத்படி இப்போது நடக்க வேண்டும். மனித வழி மிகவும் அழுக்கானவராக மாற்றி விடுகிறது. ஒருவர் பிறரை நிந்தித்துக் கொண்டிருக்கின்றனர். நிந்தனை செய்வது -இது மாயையின் பூதம். இது

தூய்மையற்ற உலகம் ஆகும். நாம் இப்போது தூய்மையற்ற நிலையிலிருந்து தூய்மை ஆகிக் கொண்டிருக்கிறோம் என்று நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். அவை மிகவும் கெட்ட பழக்கங்கள் அல்லவா. இன்றிலிருந்து தனது காதைப் பிடித்துக் கொள்ள வேண்டும் - (தவறை ஏற்றுக் கொள்வது) ஒருபோதும் இப்படிப்பட்ட காரியம் செய்யக்கூடாது. ஒருவேளை ஏதும் தீயதைப் பார்த்தீர்கள் என்றால் பாபாவுக்கு தெரிவிக்க வேண்டும். உங்களுக்கு என்ன ஆகிறது? நீங்கள் ஒருவரை ஒருவர் ஏன் நிந்தித்துக் கொள்கிறீர்கள்? தந்தை அனைத்தையும் கேட்கவே செய்கிறார் அல்லவா? தந்தை காது மற்றும் கண்களை கடனாகப் பெற்றுள்ளார் அல்லவா. தந்தையும் பார்க்கிறார், அப்போது இந்த தாதாவும் (பிரம்மா பாபா) பார்க்கிறார். நடத்தை, சுற்றுச் சூழல் ஒரு சிலருடையது சட்டத்திற்குப் புறம்பாக சென்று கொண்டிருக்கிறது. தந்தை இல்லாதவரை அனாதை என்று சொல்லப்படுகிறது. அவர்கள் தம் தந்தையையும் அறிவதில்லை, நினைவும் செய்வதில்லை. முன்னேறு வதற்குப் பதிலாக இன்னும் கெட்டுப் போகின்றனர். இதனால் தம் பதவியை இழக்கின்றனர். ஸ்ரீமத்படி நடக்கா விட்டால் அனாதைகள் ஆவார்கள். தாய் தந்தையின் ஸ்ரீமத்படி நடப்பதில்லை. நீயே தாயும் தந்தையும். . சுற்றம் என்று பாடுகின்றனர்.

ஆனால் பெரியதிலும் பெரிய தாத்தா (கிரேட் கிரேட் கிரேண்ட் பாதர்) இல்லாவிட்டால் பிறகு தாய் எங்கிருந்து கிடைப்பார், சிறிதளவு கூட புத்தி என்பது இல்லை. மாயை புத்தியை ஒரேயடியாக திருப்பி விடுகிறது. எல்லைக்கப்பாற்பட்ட தந்தையின் கட்டளையை ஏற்காவிட்டால் தண்டனை கிடைத்து விடும். கொஞ்சமும் சத்கதி ஏற்படாது. தந்தை பார்த்தார் என்றால் - இவருக்கு என்ன கெட்ட கதி ஏற்படப் போகிறதோ என்று சொல்வார் அல்லவா. இவர் எருக்கம் பூவாக இருக்கிறார். இவரை யாரும் விரும்புவதில்லை. ஆக முன்னேற வேண்டும் அல்லவா. இல்லாவிட்டால் பதவி கீழானதாகி விடும். பிறவி பிறவிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டு விடும். ஆனால் தேக அபிமானம் மிக்கவர்களுக்கு புத்தியில் பதிவதே இல்லை. ஆத்ம உணர்வுள்ளவர் கள் தான் தந்தை மீது அன்பு செலுத்த முடியும். பலியாவது என்பது சித்தி வீடு போன்றதல்ல. பெரிய பெரிய மனிதர்கள் பலியாக முடியாது. அவர்கள் பலியாவதன் அர்த்தமும் புரிந்து கொள்வதில்லை. மனம் உடைந்து போய் விடுகிறது. பலர் பந்தனத்திலிருந்து விடுபட்டவர்களும் இருக்கின்றனர். குழந்தைகள் முதலான எதுவு மில்லை. பாபா நீங்கள்தான் எனக்கு அனைத்தும் என்று சொல்கின்றனர். இப்படி வாயால் சொல் கின்றனர், ஆனால் உண்மை அல்ல. தந்தையிடமும் கூட பொய் சொல்லி விடுகின்றனர். பலியானார்கள் என்றால் தனது பற்றுதலை நீக்க வேண்டும். இன்னும் கூட நேரம் இருக்கிறது, ஆக ஸ்ரீமத் படி நடக்க வேண்டும். சொத்து முதலான வற்றிலிருந்தும் கூட பற்று விடுபட வேண்டும். இப்படிப்பட்ட பந்தனத்திலிருந்து விடுபட்டவர்கள். சிவபாபாவை தன்னுடையவராக்கினார்கள், தத்தெடுக்கின்றனர் அல்லவா. இவர் நமது தந்தை, ஆசிரியர் சத்குருவாக இருக்கிறார். அவருடைய முழுமையான ஆஸ்தியை அடைவதற்காக, நாம் அவரை நம்முடையவராக்குகிறோம். யார் குழந்தை களாகின்றனரோ, அவர்கள் (ஆதிசனாதன) குலத்தில் கண்டிப்பாக வருவார்கள். ஆனால் பிறகு அதில் பதவிகள் எவ்வளவு இருக்கின்றன. எவ்வளவு தாச தாசிகள் இருக்கின்றனர். ஒருவர் மற்றவர் மீது அதிகாரம் செலுத்து கின்றனர். தாசிகளிலும் வரிசைக்கிரமமாக ஆகின்றனர். அரச குலத்தில் வெளியில் இருக்கும் தாச தாசிகள் வரமாட்டார்கள் அல்லவா. யார்

தந்தையுடையவர்களாக ஆகின்றனரோ அவர்கள் ஆகின்றனர். பைசா அளவும் மதிப்பு பெறாத புத்தியற்ற குழந்தைகளும் இருக்கின்றனர்.

மம்மாவை நினைவு செய்யுங்கள் என்றோ, என்னுடைய ரதத்தை (பிரம்மாவை) நினைவு செய்யுங்கள் என்றோ பாபா சொல்வதில்லை. என்னை மட்டும் நினைவு செய்யுங்கள் என்று தந்தை சொல்கிறார். தேகத்தின் அனைத்து பந்தனங்களையும் விட்டு தன்னை ஆத்மா என புரிந்து கொள்ளுங்கள். அன்பு வைக்க வேண்டும் என்றால் ஒருவரிடம் வையுங்கள், அப்போது படகு கரை சேரும் என்று தந்தை புரிய வைக்கிறார். தந்தையின் வழிப்படி நடந்து செல்லுங்கள். மோகஜீத் ராஜாவின் கதையும் இருக்கின்றது அல்லவா. முதலில் இருப்பவர்கள் ஆண் குழந்தை சொத்துக்கு எஜமான் ஆவார். மனைவி அரை பங்குதாரர், ஆண் குழந்தை முழு எஜமான் ஆகிறார். ஆக புத்தி அந்தப் பக்கம் சென்று விடுகிறது. பாபாவை முழு எஜமானாக ஆக்கி விட்டீர்கள் என்றால் அவர் இவையனைத்தையும் உங்களுக்கு கொடுத்து விடுவார். கொடுக்கல் வாங்கலின் விசயமே இல்லை. இது புரிந்து கொள்ளும்படியான விசயம் ஆகும். நீங்கள் கேட்கவே செய்கிறீர்கள், அடுத்த நாள் அனைத்தும் மறந்து விடுகின்றன. புத்தியில் இருந்தது என்றால் பிறருக்கும் சொல்ல முடியும். தந்தையை நினைவு செய்தால் நீங்கள் சொர்க்கத்தின் எஜமான் ஆவீர்கள். இது மிகவும் சகஜமே ஆகும், வாயால் ஞானத்தைக் கூறிக்கொண்டே இருங்கள். இலட்சியத்தைப் பற்றி கூறிக் கொண்டே இருங்கள். கூர்மையான புத்தியுள்ளவர்கள் உடன் புரிந்து கொள்வார்கள். இறுதியில் இந்த படங்கள் முதலானவைகளே பயன்படும். இவற்றில் முழு ஞானமும் அடங்கி யுள்ளது. லட்சுமி-நாராயணர் மற்றும் ராதா-கிருஷ்ணர் இவர்களுக்குள் உள்ள சம்மந்தம் என்ன? இது யாருக்கும் தெரியாது லட்சுமி-நாராயணர் முதலில் கண்டிப்பாக இளவரசனாக இருப்பார்கள். பிச்சைக்காரனிலிருந்து இளவரசன் அல்லவா. பிச்சைக்காரனிலிருந்து ராஜா என்று சொல்வதில்லை. இளவரசனுக்குப் பிறகுதான் ராஜா ஆகின்றனர். இது மிகவும் சகஜமேயாகும். ஆனால் மாயை யாரையாவது பிடித்துக் கொள்கிறது. பிறரை நிந்தனை செய்வது, இழிவு படுத்துவது - இது பலரின் பழக்கமாகும். வேறு வேலை எதுவும் இருப்பதில்லை. தந்தையை ஒருபோதும் நினைவு செய்ய மாட்டார்கள். ஒருவர்-மற்றவரின் நிந்தனை செய்யும் காரியத்தையே செய்து கொண்டிருப்பார்கள். இது மாயையின் பாடமாகும். தந்தையின் பாடமோ மிகவும் நேரடியானது. பிற்காலத்தில் இந்த சன்னியாசி முதலானவர்கள் விழித்துக் கொள்வார்கள், ஞானம் இந்த பிரம்மாகுமார்/குமாரிகளிடம் உள்ளது என்று சொல்வார்கள். குமார்-குமாரிகள் தூய்மையாக இருப்பார்கள். பிரஜாபிதா பிரம்மாவின் குழந்தைகள். நமக்குள் ஒருபோதும் கெட்ட சிந்தனைகள் வரக் கூடாது. பலருக்கு இப்போதும் கூட கெட்ட சிந்தனைகள் வருகின்றன, பிறகு இதற்குண்டான தண்டனையும் மிகவும் கடுமையானதாக இருக்கும். தந்தை நிறையவே புரிய வைக்கிறார். ஒரு வேளை உங்களின் கெட்ட நடத்தையைப் பார்த்தால் இங்கே இருக்க முடியாது. சிறிது தண்டனையும் கொடுக்கப் படும், தகுதியை இழந்துவிடுகிறார்கள். தந்தையை ஏமாற்று கிறார்கள். ஆக தந்தையை நினைவு செய்ய முடியாது. நிலை அனைத்தும் தாழ்ந்து போய் விடும். நிலை தாழ்வதே தண்டனை ஆகும். ஸ்ரீமத் படி நடக்காததனால் தனது பதவியை கீழானதாக்கி விடுகின்றனர். தந்தையின் வழிகளின்படி நடக்காததால் இன்னமும் கூட பூதங்களின் பிரவேசம் ஆகிறது. - மிகவும் கடுமையான தண்டனை இப்போதே

தொடங்கி விடக்கூடாதே என்று பாபாவுக்கு அவ்வப்போது சிந்தனை வருகிறது. தண்டனைகளும் கூட மிகவும் மறைமுகமானதாக இருக்கும் அல்லவா. கடுமையான நிலை வந்து விடக் கூடாது. பலர் விழுகின்றனர், தண்டனைகளை அனுபவிக் கின்றனர். தந்தையோ அனைத்தும் சைகை மூலம் புரிய வைத்தபடி இருக்கிறார். தனது அதிர்ஷ்டத் தின் மீது நிறைய கோடுகள் போட்டு குறைத்துக் கொண்டு விடுகின்றனர், ஆகையால் தந்தை எச்சரித்தபடி இருக்கிறார். இப்போது தவறு செய்யக் கூடிய சமயம் இல்லை, தன்னை சுதாரித்துக் கொள்ளுங்கள். இறுதி நிமிடம் வருவதில் அதிக தாமதம் ஆகாது. நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. சட்டத்திற்குப் புறம்பான, ஸ்ரீமத்திற்கு விரோதமான எந்த ஒரு நடத்தையும் நடக்கக் கூடாது. தன்னைத்தானே சீர் திருத்திக் கொள்ள வேண்டும். கீழான அழுக்கான மனிதர்களிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

2. பந்தனத்திலிருந்து விடுபட்டவர் என்றால் முழுமையாக பலியாக (அர்ப்பணம் ஆக) வேண்டும். தனது பற்றுதலை நீக்கி விட வேண்டும் ஒருபோதும் யாரையும் நிந்தனையோ பரசிந் தனையோ செய்யக் கூடாது. அழுக்கான கெட்ட சிந்தனைகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும்.

வரதானம் : சக்திசா- ஸ்திதி என்ற சுவிட்சு ஆன் செய்து வீணானவைகள் என்ற இருளை நீக்கக் கூடிய அவ்யக்த பரிஸ்தா ஆகுக.

எவ்வாறு ஸ்தூலத்தில் லைட்டிற்கான சுவிட்ச் ஆன் செய்தவுடன் இருள் நீங்கி விடுகிறதோ, அவ்வாறு சக்திசா- ஸ்திதி என்பது சுவிட்ச். இந்த சுவிட்ச் ஆன் செய்யும் போது வீணானவைகள் என்ற இருள் நீங்கி விடும். ஒவ்வொரு வீண் எண்ணங்களை நீக்குவதற்கான முயற்சியி-ருந்து விடுபட்டு விடுவீர்கள். ஸ்திதி சக்தி சா-யாக ஆகின்ற போது மகாதானி, வரதானிகளாக ஆகிவிடு வீர்கள். ஏனெனில் வள்ளல் என்பதன் பொருள் சக்திசா-. சக்திசா-யானவர்கள் தான் கொடுக்க முடியும். மேலும் எங்கு சக்தி இருக்கிறதோ அங்கு வீணானவைகள் அழிந்து விடும். இதுவே அவ்யக்த பரிஸ்தாவின் சிரேஷ்ட காரியமாகும்.

சுலோகன்: சத்தியத்தின் ஆதாரத்தில் அனைத்து ஆத்மாக்களின் உள்ளப்பூர்வமான ஆசிர்வாதத்தை பிரப்தியாக அடைபவர்களே பாக்கியவான் ஆத்மாக்கள் ஆவர்.